1980 ஜூலை 30]

திரு. சு. முத்துக்கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, 1980–81 நடப்பு ஆண்டில் இந்தத் திட்டத்தினைச் செயல்படுத்த எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது ? ஏற்கெனவே நிதி ஒதுக்கப்பட்டு வேலைகள் நடைபெற்றுள்ளனவா ? ஆரல் வாய்மொழியில் ஏற்படுத்தப்படும் இந்தப் பொய்கை அணைத் திட்டம் சீக்கிரமாக முடிக்கப்படுமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, என்னுடைய விடையிலேயே, ஏற்கெனவே இந்தத் திட்டம் செயல்பட வேண்டுமென்ற அடிப்படையில், ரூ. 21·60 இலட்சம் செலவில் பணிகள் நடந்து வருகின்றன ; 1980–81 ஆம் ஆண்டுக்கு ரூ. 21 இலட்சம் நிதி மேலும் கூடுதலாக ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னேன். இந்தத் திட்டத்திலுள்ள ஒரு முக்கியமான அம்சம் பொய்கை ஆற்றுத் தண்ணீரை சமமாக தோவாளை கால்வாய்க்கும் செண்பகராமன்புதூர் கால்வாய்க்கும் அனுப்பி; தொவாளை கால்வாய் பிரியும் இடத்தில் திருப்பு அணை கட்டுவது, இக்கால்வாயை மேம்படுத்தி சீர்செய்வது, இக்கால்வாயின் கீழ் உள்ள 9 ஏரிகளை மேம்படுத்துவது ஆகிய குறிக்கோளுக்காக இந்தப் பணம் ஒதுக்கப்பட்டு, ஏற்கனவே ஒரு பகுதி செலவிடப்பட்டு வருகிறது. இந்த ஆண்டுக்கு மேலும் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில், மற்ற திட்டங்களையும் 1980-81-ல் துவங்குவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மற்ற எந்த நீர்பாசனத் திட்டங்கள் 1980–81-லே நடத்தப்பட இருக்கின்றன என்று அமைச்சர் சொல்வாரா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, சிறப்பு, சிறிய நீர்ப்பாசனத் திட்டம் என்ற அளவில் அரசு, மாமன்றத்தின் முன்னாலே வைத்த கொள்கை விளக்கக் குறிப்பிலே, கிட்டத்தட்ட ரூ. 70 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது, இந்த ஆண்டிற்காக, சிறிய பாசனங்கள் என்ற அளவிலே என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. நடுத்தர பாசனங்கள் விஷயமாக ஆய்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன. அதையும் கொள்கை விளக்கக் குறிப்பிலேயே நாம் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறோம்.

மதுரை மில் காலனியில் உள்ள தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் அடுக்கு வீடுகள்.

* கு. கா. வி. எண் 49—திரு. உ. சுப்பிரமணியன், திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை ஜெயில்ரோடு மில் காலனியில் உள்ள தமிழ் நாடு வீட்டுவசதி வாரியத்தின் அடுக்கு வீடுகள் (Flats) ஒதுக்கப்பட்டவர்கள் பலர் அவ்வீடுகளில் குடியில்லாமல் சட்டத்திற்குப் புறம்பாக அதிக தொகை பெற்றுக்கொண்டு குடியிருப்பதற்கு பிறரை அனுமதித்துள்ளதால், உண்மையிலேயே குடியிருக்க வீடின்றி தவிப்பவர்களுக்கு தங்க வசதி கிடைக்கவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், இதை தடுக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) மற்றும் (ஆ) மதுரை ஜெயில்ரோடு மில்காலனியில் உள்ள 174 வீடுகளும், தொழிலாளர்களுக்கு, நீண்ட கால தவணை முறையில் விற்கப்பட்டுள்ளன. இவர்களில் சுமார் 40 நபர்கள், வேலை மாற்றம் காரணமாக மதுரைக்கு வெளியே குடியேறிய காரணத்தால், தங்களது வீடுகளை வாடகைக்கு விட்டிருக்கின்றனர். வாடகைக்கு விட்டிருப்பவர்கள் வசூலிக்கும் பெரும் மாத வாடகை (Maximum rent) ரூ. 130 மட்டுமே. ஆனால் இவர்கள், இவ்வீடுகளின் விலைக்காக செலுத்தும் மாதத் தவணையோ சில இனங்களில் ரூ. 126.50-ம், மற்றும் சில இனங்களில் ரூ. 151-ம் ஆகும். எனவே, வாடகைக்கு விட்டு அதிக வாடகை வசூலித்து இலாபம் அடைகிறார்கள் என்ற கூற்று சரியல்ல. நீண்ட காலத்தவணை முறையில் அவர்களுக்கு விற்றிருந்த போதிலும், வாரிய ஒதுக்கீடு விதிகள், வாரியத்தின் அனுமதியின்றி அவர்களே வாடகைக்கு விட அனுமதிக்கவில்லை. எனவே, மேற்கூறிய வாரிய ஒதுக்கீடு விதிகளைச் சுட்டிக் காட்டி, அவர்களுக்கு அறிக்கை அனுப்பப்பட்டுள்ளது.

திரு. என். எஸ். வி. சித்தன்: பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டு வசதி வாரியத்தின் அடுக்கு வீடுகளைப் பொறுத்தவரையில் அவர்கள் அதிகப்படியான வாடகைக்கு விடவில்லை என்றாலும் கூட, அவர்கள் அறிவுறுத்தப்பட்டிருகிறார்கள் என்று சொன்னார். இது மதுரை மில் காலனியில் மட்டும் அல்லாமல் தமிழகம் முழுவதும் உள்ள இத்தகைய இடங்களில், பல்வேறு முறைகேடுகள் குறைபாடுகள் நடக்கின்றன. எனவே இப்படி சப்-ரெண்டுக்கு விடுகின்ற முறையை நீக்க அரசு முயற்சி எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே, இதை சப்-லெட்டிங் என்று சொல்ல முடியாது. இது தவணை முறையில் வாங்கப்பட்ட வீடுகளாகும். அவர்கள் பணம்

1980 ஜூலை 30]

கட்டிக் கொண்டு இருக்கிறார்கள். எங்கேயாவது அவர்கள் மாற்றலாகப் போய்விட்டால் வாரியத்தின் அனுமதி பெற்று வாடகைக்கு விடுகிறார்கள். எனவே, இது சப்-லெட்டிங் என்ற தலைப்பில் வரும் என்று நான் கருதவில்லை.

நாகர்கோவில் அரசு மருத்துவமனை.

*கு. கா. வி. எண் 50—திரு. மி. வின்சென்ட்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நாகர்கோவில் பெரிய அரசு மருத்துவமனையில் (Anaesthetist (அனஸ்தடிஸ்ட்), (Skin specialist, தோல் வியாதி நிபுணர்) Orthopaedic specialist (எலும்பு முறிவு வல்லுனர்) ஆகியோர் உள்ளனரா ?

(ஆ) இல்லை என்றால் உடனே நியமிக்கப்படுவார்களா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) சரும நோய் மருத்துவர் மட்டும் தற்போது உள்ளார்.

(ஆ) மற்ற காலி இடங்கள் விரைவில் நிரப்பப்படும்.

திரு. மி. வின்சென்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, பெரிய அறுவை சிகிச்சை செய்யும் காலங்களில் நோயாளிகள் சொரணை இல்லாமல் செய்யக்கூடிய மருத்துவர், அனஸ்தடிஸ்ட் இல்லாததால், சில மருத்துவமனைகளில் அறுவை சிகிச்சை செய்து கொளும் நோயாளிகள் நிரந்தரமாகவே சொரணை இல்லாமல் போய், மாண்டுவிடுகிறார்கள். ஆகவே எல்லா தனியார், அரசு மருத்துவமனைகளிலும் பெரிய அறுவை சிகிச்சை செய்யும் போது அனஸ்தடிஸ்ட் இருக்கவேண்டும் என்றும், அப்படி அனஸ்தடிஸ்ட் இல்லாத மருத்துவமனைகளில் அறுவை சிகிச்சையே செய்யக்கூடாது என்றும் பொதுவான ஒரு ஆணை பிறப்பிக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அனஸ்தீசியா குவாலிபைடு டாக்டர் அங்கே இல்லை என்றாலும் கூட, அங்கே இருக்கின்ற எம்.பி.பி.எஸ். படித்த டாக்டர்கள், அனஸ்தீசியாவில் ஓரளவுக்கு பயிற்சி பெற்றவர்கள் அந்த பணியை நடத்திக் கொண்டு இருக்கிறார்கள். அதனால் எந்தவிதமான தொல்லையும் இல்லை.